விலை: சதம் 75

இலங்கை ஓட்டுப்பலகை கூட்டுத்தாபனம், தங்களது விற்பனை முகவர்களாக எம்மை நியமனம் செய்துள்ளது. உங்களுக்குத் தேவையான சிப்போட், பிளவூட் வகைகளுக்கும் கதவுகளுக்கும்
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, டவுன்ஸ்ரேட், யாழ்ப்பாணம்
தொலைபேசி : 508

ஈழநாடு
THE EELANADU

தரத்தினில் சிறந்த
மான் - முயல் - வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மு.தா.பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
போன்: 7493

மலர் 23 | ஆவணி 6 | ஷவ்வா 21 | இதழ் 189
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 22-8-1981

# இனக்கலவரம் திட்டமிட்ட செயல்

## பாராளுமன்றத்தில் 'எஸ்.டி.' குற்றச்சாட்டு

(கொழும்பு)

"அண்மையில் நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரங்கள், அரசியல் காரணங்களுக்காக, நன்ருகத் திட்டமிடப்பட்டு நிகழ்ந்துள்ளன" என்று கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, நேற்று பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட அமுல் தொடர்பான விவகாரத்தில் பேசுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியதாவது:-

"இனக்கலவரங்களின்போது கொலைகள், கொள்ளைகள், சூறையாடல்கள் எல்லாம் இடம்பெற்று மக்கள் அகதிகளாகியபின்னர் காலதாமதமாக அவசரகாலச் சட்டத்தை அரசு அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது.

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமை அலுவலகம் மூடப்பட்ட பின்னர் அந்த அலுவலகத்தையும் அக்கட்சியின் பத்திரிகையாகிய 'தினகர' வையும் சுவீகரிக்கும் நோக்குடனேயே அரசு, அவசரகாலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது.

### குழம்பிய குட்டையில்

"அரசு குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சிக்கிறது.

"அண்மையில் இடம்பெற்ற இனக்கலவரங்கள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிப்பதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்.

"அவசரகாலச் சட்டத்தை அமுல்செய்துள்ளதன் மூலம் அரசு ஜனநாயகபாரம்பரியங்களுக்குத் தடைவிதித்துள்ளது என அரசுமீது நான் குற்றம் சுமத்துகிறேன்.

### 13பேர் கொலை

"வன்முறைச் சம்பவங்களின் போது 13 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர், 500க்கும் அதிகமானவர் தீயிடப்பட்டும், தாக்கப்பட்டும் உள்ளனர். லட்சக்கணக்கான உடைமைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் பின்னர்தான் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

"43 தோட்டங்களில் லயன்கள் தாக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரம் தோட்டத்தொழிலாளர்கள் அகதிகளாகி உள்ளனர். [ம-இ]

★ இலங்கைத் தமிழருக்கு அனுதாபம் தெரிவித்து

# சென்னையில் ஹர்த்தால்

## எம். ஜி. ஆர். ஏற்பாடு செய்கிறர்

சென்னை, ஆக. 21

இலங்கை தமிழ் மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில், எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் சென்னையில் ஹர்த்தாலொன்றை நடத்தப் போவதாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இன்று தமிழகசட்டப் பேரவையில் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழ்மக்களுக்கு அண்மையில் ஏற்பட்ட அவல நிலை குறித்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று அதிர்ச்சி தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான கண்டனத் தீர்மானமொன்றும் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த இருபது ஆண்டுகளாக இலங்கைத்தமிழ் மக்கள் அரசாங்கத்தால் கொடூரமாக நடத்தப்பட்டு வந்துள்ளதாகவும், இதன் காரணமாகவே அவர்கள் தனி நாடு கோரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தமிழ்நாடு சட்டப்பேரவையில் இன்று தெரிவித்தார்.

அதேவேளை இந்திய ராஜ்ய சபையில், இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னையை ஐ. நா. சபைக்கு கொண்டு செல்ல வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த கோரிக்கையை, பாரத வெளிநாட்டு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் நிராகரித்தார். [வெ]

"சிங்கள மக்களின் மத்தியில்

# தமிழர் பயமின்றி வாழ முடியாவிட்டால் தமிழீழக்கோரிக்கை குறைகூறமுடியாது

## பாராளுமன்றத்தில் அமைச்சர் தேவநாயகம்

[கொழும்பு]

"சிங்கள மக்களின் மத்தியில் தமிழ் மக்கள் எதுவித பயமுமின்றி வாழ முடியாவிட்டால் 'தமிழ் ஈழம்' கோரிக்கையை எவரும் குறை கூற முடியாது."

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரும் கல்குடா தொகுதி எம். பி. யுமான திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அரசியல் அமைப்பில் எதை எழுதினாலும் எதனை வழங்கினாலும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இன்றேல் இவற்றில் எல்லாம் எதுவித பயனும் இல்லை என்றும் அவர் கூறினர்.

ஐக்கிய இலங்கையே ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கை. இந்நாட்டின் சகல மக்களும் சகல பிரிவுகளிலும் வாழ உரிமையுண்டு என்றும் திரு தேவநாயகம் கூறினர்.

### மைத்திரி கருத்து

மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில் கூறியதாவது:-

"நாட்டுப்பிரிவினையை நாம் எதிர்க்கிறோம். இன்றைய நிலையில் அமுலுக்குவந்துள்ள அவசரகாலச்சட்டத்துக்கு ஆதரவு கொடுத்து நிலைமையைக் கட்டுப்படுத்த அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம், எனினும் அவசரகாலச்சட்டத்தை அமுல் செய்ய அரசு காலம் தாழ்த்திவிட்டது என்பதை மறுப்பதற்கில்லை." [ம-இ]

# 2 பொலிஸார் றிமாண்டில்

[யாழ்ப்பாணம்]

சாட்சியங்களை சிருஷ்டித்த குற்றச்சாட்டின் மீது பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும், 'றிசேவ்' பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் வேலாயுதம் பிள்ளையும், 'றிசேவ்' பொலிஸாக கடமையாற்றிய வி. ரகுநாதனும் யாழ். நீதிபதி திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டு செப்டம்பர் 4ம் திகதி வரை றிமாண்டில்வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் மே 30ம் திகதிக்குப் பின்னர் சுன்னாகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக உடுவில் கிராம சபை காவலாளி கனகலிங்கம் நாதன் மூலமாக, மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் சாட்சியங்களை சிருஷ்டித்ததாக குற்றம் சாட்டி இவர்கள் நீதவான் முன்னிலையில் ஆஜர்

[6-ம் பக்கம் பார்க்க]

லண்டனிலுள்ள

# இலங்கைத் தூதரகம் தீவைக்கப்பட்டது!

## கட்டிடத்தின் முன்பகுதி சேதம்

[கொழும்பு]

"நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை [இலங்கை நேரப்படி] சுமார் நாலரை மணியளவில், லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு தீவைக்கப்பட்டது. இதன் விளைவாக தூதரக் கட்டடத்தின் முன்பகுதி சேதமடைந்துள்ளது"

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, நேற்றுப் பிற்பகல் பாராளுமன்றத்தில் மேற்படி தகவலை வெளியிட்டார்.

இது சம்பந்தமாக பிரதமர் தொடர்ந்து தெரிவிக்கையில், இலங்கைத் தூதரக் கட்டத்துக்கு தீ வைக்கப்பட்டதும்; உடனடியாக தீ அணைப்புப் படையினர் தீ பரவாமல் தடுத்து விட்டனர் என்றும், பெருமளவு சேதம் ஏற்படவில்லை என்றும், முன்பகுதி மட்டும் ஓரளவு சேதத்துக்குள்ளானது என்றும் கூறினர். [ம]

# சொற்போர்! பிரதமர்-எஸ். டி.

[கொழும்பு]

அவசரகாலச் சட்டம்மீதான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றபோது கம்பஹா எம். பி. திரு எஸ். டி. பண்டாரநாயக்காவுக்கும் பிரதமருக்குமிடையே கடும் வாக்குவாதம் மூண்டது.

எஸ். டி: நாட்டில் ஜனநாயக பாரம்பரியங்களை அரசு தடைசெய்கிறது.

பிரதமர்: நீர் கூறுவது பீலிக்ஸின் கருத்தா?

எஸ் டி. இது அர்த்தமற்ற கூற்று.

பிரதமர்: நான் கூறியது சரி என்கிறேன்.

எஸ் டி. நான் அதனை மறுக்கிறேன்.

### பீலிக்ஸை சந்தித்தீரா?

பிரதமர்: நேற்று இரவுக்குப் பின்னர் இன்று காலை வரை நீர் பீலிக்ஸை சந்திக்கவில்லையா?

எஸ். டி: சபாநாயகர் அவர்களே! இக்கேள்வியைக் கேட்க பிரதமருக்கு உரிமை இல்லை. எனினும் நான் அவரது கூற்றை மறுக்கிறேன்.

அனுரா: தொலைபேசியில் பேசியிருப்பார்

[சபையில் சிரிப்பு]

எஸ் டி: இந்த இனக்கலவரத்தின் பின்னணியில் திட்டமிட்ட பெரும் சக்தி ஒன்று செயல்பட்டிருக்கிறது.

பிரதமர்: யார்?

### ஆயிரம் குண்டர்களை யாழ். அனுப்பினீர்கள்

எஸ். டி: விசாரணைக் கமிஷனை நியமித்து நீங்கள் கண்டு பிடியுங்கள் மே 31-ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு ஆயிரம் குண்டர்களை நீங்கள் அனுப்பினீர்கள்.

பிரதமர்: நான் ஆயிரம் குண்டர்களை அனுப்பினேன? என் மீது குற்றம் சாட்டுகிறீரா?

எஸ். டி. உங்கள் மீதல்ல; அரசின் மீது குற்றம் சாட்டுகிறேன்.

பிரதமர்; யார் - எப்போது - எதற்காக அனுப்பப்பட்டார்கள்: என்பதை தெளிவாகக் கூறுங்கள்.

[6ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

2 சிறி தொடரிலக்க A 40 Farina கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 74, இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (0695)

## தேவை

மர பொதியுடன் கூடிய A 40 வான் உடன் தேவை. விலை மற்றும் விபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். சி. க. க. குருதேவர், "மீரு இல்லம்", மயிலிட்டி. (0673)

## குத்தகைக்கு

புதிதாக அமைக்கப்பட்ட கோட்டை அரிசி மில் குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. தொடர்பு சந்நிதி மில், வட்டுக்கோட்டை (0676)

## முதலிலே ஆக்கப்படும் முற்றுனகட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற வல்வெட்டியைச் சேர்ந்த தாமர் நாகமுத்து நெடும்பரப்பிள்ளையின் மரண சாதன விடயமாக

மூதல்வழக்கு இல. 1119. T.

இறந்தவர்

நெடும்பரப்பிள்ளை நடராசா சேனன்தோட்டம் வல்வெட்டி.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான மரண மெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1981ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதிவுசெய்யப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக்கட்டளைப்படி

பதிவாளர்

1981ம் ஆண்டு ஆவணி மாதம் 14ம் திகதி

(0679)

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 6-ம் திகதி சனிக்கிழமை (22 - 8 - 81)

மேடம்: எண்ணம் போல் வாழ்வு இன்று பிரகாசிக்கும் நீண்டநாள் எதிர்பார்த்த செய்தி இன்று கிடைக்கலாம் வியாபார விருத்திக்கும் இடமுண்டு.

இடபம்: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும் பிடிவாதக்குணம் பின்தங்கிய நிலையில் தள்ளிவிடும் பெரியோரைப் பகைத்துக் கொள்ளாமல் பேணவும்.

மிதுனம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும் எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும் வழக்கு விவகாரங்களில் வெற்றி காணும்.

கடகம்: நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னான நாள் தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதல்கள் கிடைக்கும்.

சிம்மம்: வாய்வுக் கோளாறினால் வேதனைபடுவீர்கள் உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். எதிரிகளின் சோழைத்தனமான விபத்துக்கு இடமுண்டு.

கன்னி: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும், இல்லம் பல்கலைக்கழகமாக மாறும் அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும் களஞ்சிய வழியாலும் கண்ணியம் சேரும்.

துலாம்: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும் மயக்கும் மொழிகளில் பணத்தை இழக்க நேரிடலாம் இன்று சும்மா இருப்பதே சுகம்.

விருட்சிகம்: நல்லதைச் செய்வீர்கள். பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும் அரசியல் காரியங்களில் அதிகூடிய தேவைகளை அடைந்து கொள்வீர்.

தனு: தொழில் பகுதியில் உரிய வசதிகள் கிடைக்கலாம். எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பிதழ் கிடைப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைக்கலாம்.

மகரம்: புதிய கோணத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு. துணைவரையே துணையெனக் கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள் பொதுசனத்தலைமையுடன் புகழும் சேரும்.

கும்பம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும் கிளைத்த வழியால் கவலை தோன்றும் விவசாயிகளாயின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு.

மீனம்: எவ்விடயத்திலும் நன்கு ஆலோசித்தபின்பே முடிவெடுக்கவும் முகமன் கூறுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

சோதிடகலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்.

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் பிறவுண்ரோட், சிவகுருநாதர் ஒழுங்கை 37/1ம் இலக்கத்து சதாசிவம் சண்முகம் என்பவரின் மரணச் சொத்து விடயத்தில்.

இல: தத்துவம்/ 615

மரணமெய்தியவர்.

சதாசிவம் சண்முகம் மைம்பெண் அமராவதி 37/1 சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் ரோட்டு, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேற்குறிப்பிட்ட நீதிமன்றத்தில் இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும்இருப்பின் 1981ம் ஆண்டு ஐப்பசி மாதம்16ந் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறுபதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு தேவைப் படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்ற கட்டளைப்படி,

தா. குலஞானம்,
பதிவாளர்.

1981ம் ஆண்டு ஆனி மாதம் 23ந் திகதி.

தயாரித்தது:
(ஒப்பம்)
வ. வரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி.
0682

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற வல்வெட்டித்துறை கந்தசாமி சபாரத்தினத்தின் மூதல்தத்துவ சம்பந்தமாக.

இறந்தவர்

தத்துவ நியாயாதிக்கம்
இல: 1112 T

சபாரத்தினம் பொன்னம்பலம் சந்தி ஒழுங்கை, வல்வெட்டித்துறை

எதிராக மனுதார்

சபாரத்தினம் விஜய மூர்த்தி மீனாட்சி அம்மன் கோவிலடி தற்காலம் கிரேக்க நாடு.

எதிர் மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4-ம் திகதி முற்பகல் 9 - 30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1981ம் ஆண்டு ஆடி மாதம் 31ம் திகதி

நீதிமன்றஉத்தரவுப்படி
கே. செல்வராஜா
பதிவாளர்.

வரைவு,
ந. கு. பாலசுப்பிரமணியம்
மனுதாரின் சட்டத்தரணி
0680

# இன்று கொழும்பில் நடக்கும் மாகாணப்போட்டிக்கு 7 ஆண்கள் 6 பெண்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மாகாணங்களுக்கிடையே நடைபெறும் சுவட்டுமைதான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வடமாகாணத்திலிருந்து 7 ஆண்களும் 6 பெண்களும் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

இன்றும் நாளையும் கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் இவ்விளையாட்டுப்போட்டி நடைபெறவிருக்கிறது.

விளையாட்டு அமைச்சின் செயலாளர் திரு எஸ் டபிள்யு மடுகல்லே தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற விளையாட்டு விவகார அமைச்சர் திரு எட்வின்சன் பெரேரா கலந்துகொள்வார்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் கோஷ்டிக்கு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு எஸ் பரியதாஸ் தலைமை தாங்குகிறார்.

இக்கோஷ்டியை யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. எம் சுப்பிரமணியம் வழியனுப்பிவைத்தார். [மா]

## நாச்சிக்குடாவில் காணிப்பங்கீடு

(யாழ்ப்பாணம்)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த நாச்சிக்குடாக் கிராமத்தில் சுமார் 450 ஏக்கர் நிலம் காணிக்கச்சேரி மூலம் ஆளொன்றுக்கு 2 ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இக்காணிக்கு விண்ணப்பிப்பவர்கள் நாச்சிக்குடாக்கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களாகவும் இலங்கைப் பிரஜைகளாகவும் இருத்தல் வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் அரசாங்க அதிபர் (காணிப்பகுதி) கச்சேரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அடுத்த மாதம் 10-ம் திகதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும் என மேலதிக அரசாங்க அதிபர் திரு மு. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். [மா]

## கந்தரநுபூதி உரை நூல்

(சுழிபுரம்)

நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவ காலத்தில் பக்தர்கள் படிப்பதற்காக கந்தரநுபூதி உரை நூலை வழக்கம்போல சனசமூக நிலையத்தினர் மீண்டும் வெளியிட்டு செய்துள்ளனர். சுழிபுரம் யோகி சா. கார்த்திகேசு இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார்.

## கடலட்டை பதனிடும் தொழிற்சாலை

(மன்னார்)

''மன்னாரில் பல மாதங்களாக இயங்காதிருக்கும் கடலட்டை பதனிடும் தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்'' என்று கடற்றொழில் விருத்தி மந்திரிசபையின் மன்னார் இணை உறுப்பினர் ஜனாப். எம். எச். எம். கௌத் அரசைக் கோரியுள்ளார்.


## ''சங்கராபரணம்''

படத்தின் இனிய பாடல்களை சிங்கப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட Master Cassette இலிருந்து T D. K கெசட்களில் பதிவு செய்து கொடுக்கிறோம்.

துர்க்காஸ் றெக்கோடிங்பார்

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (690)

## ஏல விற்பனை

குருநகர் புனித யாகப்பர் ஆலய வளவினுள் நிற்கும் மகோகனி மரங்கள் 23-8-1981 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

மரவியாபாரிகள், கட்டிட ஒப்பந்தக்காரர்கள் உட்பட வாங்க விரும்பும் அனைவரையும் இவ் ஏல விற்பனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். ஏலவிற்பனையின்போது கோரப்படும் மரங்களின் பெறுமதி பங்குக்குரவராலும் பங்குச்சபையாலும் அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே மரங்கள் விற்கப்படும்.

இங்ஙனம்

பங்குக்குரவரும் பங்குச்சபையினரும்.

புனித யாகப்பர் ஆலயம், மெயின்வீதி, [சின்னக்கடை]
குருநகர், யாழ். 1-8-81. (0592)

## பொதுமுகாமையாளர் தரம் 111 பதவி வெற்றிடம்

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுல் மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கத் தகைமையுள்ளோர் 31-08-81க்கு முன்பதாக பதிவுத்தபால் மூலம் "தலைவர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுந்தீவு" என விலாசமிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

வேதனம் 840 — 590 என்ற அடிப்படையில் 15 X10 — 20 X 5 அதற்குரிய படிகளும்

தகைமைகள்:
1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி.
2. C. E. C. உயர் தரத்துடன் மூன்று வருட கால அனுபவம்
3. 5 வருட அனுபவமுள்ள கூட்டுறவுப் பரிசோதகர்.
4. வருடம் ரூபா 2000000/-இல விற்பனவாகக் கொண்ட ஸ்தாபனம் ஒன்றில் மூன்று வருட அனுபவம்.

நா. இராமச்சந்திரன்,
தலைவர்.

0684

## சிசில் குளிர்சாதனப் பெட்டிகள்

SISIL REFRIGERATORS

* ஒரு வருட தயாரிப்பாளரின் உத்தரவாதம்
* எல்லா உறுப்புகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
* மிகக் குறைந்த விலையில் ஒரு சிறந்த பொருள்
* திருத்துதல், பெயின்ற் அடித்தல்

திறமான முறையில் வெகு விரைவில் நியாயமான செலவில் பயிற்சி பெற்ற வேலைகாட்களால் செய்துகொடுக்கப்படும்

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்.

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 234

### மணிவாக்கு

நல்ல வித்து ஒன்றின் வளர்ச்சிக்குத் தேவையாயிருக்கும் நிலத்தையும், நீரையும், காற்றையும், வெளிச்சத்தையும் இயற்கை நல்கிவிடுகிறது. சமூகத்துக்குப் பயன்படும் வேலைத்திட்டத்துக்கு வேண்டிய வசதிகளையும் இயற்கை இனிது அளித்து விடுகிறது.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## நைரோபி மாநாடு

"தெண்ணீர் அடுபுற்கை ஆயினும்
தாள்தந்தது உண்ணலின் ஊங்கினியதில்"

உழைத்துப் பெறும் உணவு மிக இனியதும் உயர்ந்ததும் ஆகும் என்ற கருத்தை முனிவர் இக்குறளில் கூறுவது உழைப்பின் உயர்வை உணர்த்துகின்றது.

எமக்கிதில் பிடித்தமானது புற்கை பொங்க உதவி விறகென்பதே. பெற்றல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள், முனிவர் இனியதாகக் கூறும் புற்கை சமைக்க உதவவில்லை; அவ் எரிபொருள்கள் "தெண்ணீர் அடுபுற்கை"க்குப் பொருத்தமானவையல்ல.

நைரோபியில் நேற்று முடிவடைந்த ஐ. நா. எரிபொருள் மாநாடு 11 நாட்களாக, உலக நாடுகளை எதிர்நோக்கும் எரிபொருள் நெருக்கடியை நீக்க மேல்நாட்ட நிபுணத்துவ கருத்துப் பரிமாறுதலில் ஈடுபட்டிருந்தது.

'அபிவிருத்தி' என்னும் மந்திரத்தை ஐ. நா. 20 வருடங்களாக உச்சாடனம் பண்ணிவந்தபோதும் மூன்றாம் உலக நாடுகள் இன்னும் வறுமையில் தத்தளிக்கின்றன.

மேனாட்டு உலோகாயத அபிவிருத்தித் திட்டங்களும் நவீன நாகரிக வாழ்வும் உலகின் ஆத்மிகபலத்தை தேய்ச்சை நிகழ்த்தி முடியும் தறுவாயில், கறுப்பர் வெள்ளையர் கலந்த 300 ஆர்ப்பாட்டக்காரர் — கென்யா வாசிகள்—அவருக்கு விறகுக் கட்டு ஒன்றும், பானையில் எரியும் விறகுமரக் கன்று சாம்பிளும் பரிசாக வழங்கினர்.

இது அர்த்தமுள்ள சம்பவம்—மேல்நாட்டுப் பாணியில் அபிவிருத்தி என்று 30 வருடங்களாகப் பிசாசு செய்து வறிய நாடுகள் அடைந்த பலன் ஒன்றும் இல்லை.

எந்த வழியிலும், முறை தவறியும் பொருளை—காசை 'அடிக்க' வேண்டுமென்பதே மேற்கத்திய பொருளாதார இலட்சியம். அந்த அடிப்படையில் நாடுகள் எல்லாம் நவீன முறையில் அபிவிருத்தியில் இறங்குவதே முன்னேறுவதற்கு வழி என்று ஐரோப்பிய அமெரிக்க நிபுணர் வற்புறுத்துகின்றனர்.

இந்தப் போக்கு மலையைக் கெல்லி எலியைப் பிடித்த முயற்சி போலத் தோன்றுகிறது.

இதனை நிரூபிக்க மாநாட்டின் ஒரு சுவையான சம்பவம் உதவும். கனேடியப் பிரதமர் தமது பேருரையை நிகழ்த்தி முடியும் கட்டத்தில் 300 ஆர்ப்பாட்டக்காரர்—கறுப்பரும் வெள்ளையரும்—ஆர்ப்பாட்டத்தை முடித்து, மண்டப வாசலில் வந்து, ஒரு விறகுக் கட்டையும் பானையில் வளர்ந்த விறகுமரக் கன்றையும் பரிசாகப் பிரதமருக்கு வழங்கினர்.

"எங்களைச் சிந்திக்கத் தூண்டுகிறீர்கள்" என்று பதிலளித்த கனேடியப் பிரதமருக்கு ஆர்ப்பாட்டக்காரரின் கருத்து சுவைத்தது.

ஆனந்தக்குமாரசுவாமி வழங்கிய தீர்க்கதரிசனம்.

காட்டை அழித்து வீடு கட்டவும் துலாவை ஒழித்த தண்ணீர் பம்பு பெற்றலில் அமைக்கவும், மின் சக்தி அடுப்பில் சமைக்கவும், மின்சக்தியில் சலவை முதலிய வீட்டுவேலைகள் பலவற்றையும் நம்பிவாழும் நாம் எங்கள் பரம்பரையான வாழ்க்கை முறையில் நிலைத்த நல்ல அம்சங்களைச் சிக்கன வாழ்வுப் உடனுறைப்பு அடிப்படையில் திரும்பவும் புனரமைக்க முயல்வதே விவேகம்.

சூரியன், காற்று, காடு போன்ற இயற்கைப் பொருள்களை நன்கு ஆராய்ந்து அவற்றில் நம்பிக்கை வைத்து வாழப்பழகுவது அவசியமென்பதை இந்த மாநாடு மறைமுகமாக நினைவூட்டுகின்றது.

## மேற்காசிய நெருக்கடி

மத்திய கிழக்கு மத்திய கிழக்காகவே இருந்து வருகிறது. உத்தமநிலையை நாடுவதை விட்டு அதம நிலைக்குத் தள்ளப்படுகிறது.

ஆனையும் பூனையும் மோதுவது போல அமெரிக்காவும் ரஷ்யாவும் போட்டியிடுகின்றன. லிபிய ஜனாதிபதி மந்த தேசத்தின் எண்ணெய் வளம்பெற்ற செல்வாக்குக்கு உரித்தானவர்; ரஷ்ய நவீன ஆயுத உதவி பெற்றிருப்பவர்; அத்துடன் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்திக்கு தலைமை தாங்க இருப்பவர். எனவே மேற்காசியாவின் தலைவரென்ற புகழை விரும்புவது இயற்கை.

ரஷ்ய உதவியுடன் தலைநிமிர்ந்து நிற்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தலையடி கொடுப்பதே ஜனாதிபதி றீகனின் தெளிந்த கொள்கையாகும். எனவே கேணல் கடாபியின் ஆரவாரம் பெற்ற தலைமைக்கு அமெரிக்கா முட்டுக்கட்டை போடத்தவறாது.

1978ம் ஆண்டு முன்னைநாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் இஸ்ரேலையும், எகிப்தையும் 'காம்ப் டேவிட்' ஒப்பந்தம் மூலம் ஒற்றுமைப்படுத்தியது ஒரு பெருஞ்சாதனையாகக் கருதப்பட்டது.

இன்று அது செல்லாக்காசாய்விட்டது. காரணம் தீர்த்துவைக்கப்படாத 12 லட்சம் பாலஸ்தீனமக்களின் 25 வருடகால நீண்ட பிரச்னை.

இன்றைய ஜனாதிபதி றீகன் பி. எல். ஓ என்பது ஒரு பயங்கரவாத இயக்கமென்றும் அதனை வேரோடு அறுத்துவிட வேண்டுமென்றும் நினைக்கின்றார்: இதில் வியப்பில்லை. அவருடைய செல்லப்பிள்ளையாகிய 'இஸ்ரேல்' பாலஸ்தீனர்கள் மீது அடிக்கடி ஆக்கிரமிப்பது. அமெரிக்காவுக்கு மகிழ்ச்சி அளிக்கும் செயலாகும்.

எகிப்தின் தலைவர் சாதாத் பாலஸ்தீனர்களோடு சமாதானப் பேச்சு நடத்த அமெரிக்காவைக் கோருகிறார். நடவாத காரியம் அது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் சாமான்ய மக்களல்ல; புராதன நாகரிக வரலாற்றுப் பெருமையுடையவர்கள்.

அவர்களுக்கு உரிமைகள் கிடைத்தால்தான் மேற்காசியாவில் நிரந்தர சமாதானம் நிலவும்.

# கதிர்காமக் கந்தன் பற்றிய ஆங்கில நூல்!

"கதிர்காமத்தின் தெய்வீக சக்தியும் அதன் உணரும் வழிவகைகளும்" இத்தலைப்பினைக் கொண்ட நூல் ஒன்று இலகு ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. இலங்கைப் பொலிஸ் துறையில் முன்னாள் பொறுப்பதிகாரியாகப் பணிபுரிந்த திரு. ஆறுமுகம் இராசையா இந்நூலை ஆக்கித்தந்துள்ளார்.

முன்பு ஆசிரியர் பரணீதரன் இமயம் தொட்டு குமரிமுனை வரையுள்ள தெய்வீக சக்தி பொருந்திய அரிய வரலாற்று முக்கியத்துவமிக்க ஆலயங்களுக்கு யாத்திரை செய்து அவை பற்றி ஆனந்தவிகடனில் எழுதி அரிய பெரிய தொண்டாற்றினார். இத்தகைய பணியிலேயே திரு. ஆ. இராசையா அவர்களும் இறங்கி கதிர்காமம் பற்றிய சுவாரஸ்யமான தகவல்களைத் தனது நூலில் இடம்பெறச் செய்துள்ளார்.

கதிர்காமத்தலத்தின் மகிமை அதன் இயற்கையோடமைந்த சூழ்நிலை அங்கு இடம்பெறும், வழிபாட்டு முறைகள், நிகழ்ச்சிகள், உற்சவங்கள், அவற்றின் விளக்கங்கள் என்பவை தெளிவாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மூன்று அத்தியாயங்களை உள்ளடக்கிய ஒரு புத்தகமாக வெளியாகியிருக்கும் இம் மலரில் முதல் அத்தியாயத்தில் முற்றிலும் கதிர்காமம் பற்றியே ஆராயப்பட்டுள்ளது.

இரண்டாம் அத்தியாயம் வடக்கில் வாழ்ந்த யோகசுவாமிகள் அவரது பற்றியும் தொண்டர்கள், சிஷ்யர்கள் பற்றி விளக்கி தொடர்ந்து கதிர்காமத்தில் தொண்டாற்றிய சந்நியாசிகள் அவர் தம் மடாலயங்கள் ஆகியன பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாம் அத்தியாயம் இந்து கலாசாரத்தின் தத்துவ விளக்கங்களையும் அவற்றினூடாகத் தெய்வீக இன்பத்தை நுகரும் வகைகளையும் விளக்குவதாக உள்ளது. இவ்வகையில் இந்துக்களின் நடைமுறை வாழ்வின் ஒழுக்கம், தெய்வீக சிந்தனைகள் பெறும் முக்கியத்துவம் அவற்றுக்கு நம் சமய மூதாதையர் கொடுத்த விளக்கங்கள் என்பன எளிமையாக விளக்கப்பட்டுள்ளன.

இம் மலரினை நாம் வாசிக்கும் போது இது உள்ளடக்கியிருக்கும் தகவல்களைப் பெற ஆசிரியர் மேற்கொண்டுள்ள பிரயத்தனங்கள், உத்திகள் என்பன தெளிவாகப் புலனாகின்றன. இவ்வகையில் இவ்வாசிரியர் இரீடத்திலிருந்து மட்டும் தாம் பெற்றவற்றை அளச போடாது. ஒரு பயண எழுத்தாளரைப்போல (Travel writer) செயற்பட்டுள்ளார். இத்தகைய செயற்பாடே இம்மலர் மிகவும் நேர்த்தியான சுவாரஸ்யமான தகவல்களை உள்ளடக்குவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

ஆசிரியர் கதிர்காமச் சூழலை வெகுநுணுக்கமாக அணுகியுள்ளதுடன் அவற்றை மிக இலகுவாகப் புரியக்கூடிய விதத்தில் வாசகர்களுக்காகப் புனைந்துள்ளார். இதுவரை காலமும் கதிர்காமம்பற்றி வெளிவந்த தகவல்கள் அநேகமானவைகதை வடிவிலும், முழுக்க முழுக்க வரலாற்று நிகழ்ச்சிகளை உள்ளடக்கியவையாகவும், கவிதைகள், பாடல்களாகவுமே வெளிவந்துள்ளன. இத்தகைய பாணிகள், தற்காலத்தில் சகல வாசகர்களையும் கவரக்கூடிய தொன்றல்ல. இவற்றில் சில ஒருவரது கற்பனையாகவும், சில அக்கோயில் பற்றி கர்ணபரம்பரையாக வெளிவந்த தகவல்களாகவும் விளங்குகின்றன. ஆனால் தற்காலத்தவர் உண்மைத் தகவல்களுக்கும், நேரடியாகப் பெறப்பட்டவற்றுக்குமே அதிக முக்கியத்துவத்தினைக் கொடுக்கின்றனர். எனவே இவ்வாசகர்களது ரசனையை அறிந்து, அதற்கேற்றாற்போல அத்திருத்தலம் கொண்டுள்ள வரலாற்றுக்கதைகள் நிகழ்ச்சிகள் என்பன எவ்வண்ணம் அமைந்துள்ளன என்பதனை அங்கு காணப்படும் சூழல் நடைமுறைகள் போன்றவற்றை விளக்குவதன் மூலம் ஆசிரியர் இனிது செயற்பட்டுள்ளார்.

கதிர்காமக் கடவுள் முருகன், அங்கு நடாத்திய திருவிளையாடல்கள், வள்ளிதிருமணம், சூரன்போர் போன்ற நிகழ்ச்சிகளை, வெறுமனே பக்திவசப்பட்ட ஒருவர் உணர்ச்சி மேலீட்டவராய், தல்கதைகளைக் கேட்டப்புகழ்ந்தும், அந்நிகழ்ச்சிகளைத் தன்ரசனைக்கேற்ப ரசித்தும் விளக்குவது போலல்லாது, கதிர்காமச் சூழலிலே, முன்னைநில மொழிநில சாதாரணவேட்டுவ வம்சத்தவர் வாழ்வில் இடம்பெற்ற சுவாரஸ்ய நிகழ்ச்சிகளாக வர்ணித்துள்ளார். இக்கையாளல் நீச்சயம் யாவரையும் கவரக்கூடியதே. சிறப்பாக உல்லாசப் பயணிகளுக்கு நல்லதோர் விளக்கமாகும். ஆ. இராசையா, பொலிஸ் அதிகாரியாக இருந்தவர் என்ற முறையில், சேவைக்காலங்களில் அரிய பல தொடர்புகளைக் கொண்டிருந்திருப்பார். அவற்றையெல்லாம் தொகுத்துத், தாம் கண்டவற்றையும், கேட்டவற்றையும், அனுபவித்தவற்றையும், தற்போதோர் எழுத்தாளருக்கு நவீன சந்ததிக்கேற்ற வகையில் நல்ல வழிகாட்டியாக இம்முயற்சியில் இறங்கியிருப்பது பாராட்டுதற்குரியதே. இவ்வகையில் இவரது கன்னி முயற்சியான இம்மலர் கதிர்காமம்பற்றி அறியவிரும்புவோருக்கு அரிய தகவல்களை அளிப்பதாகக் காணப்படுகின்றது. ஆசிரியர், இம்மலருக்கு மேலும் விளக்கமளிக்கும் வகையில் கதிர்காமத்தின் முக்கிய பகுதிகளையும், சம்பவங்களையும் புகைப்படங்களாகவும் இணைத்துள்ளார். திரு. ஆ. இராசையாவின் இப்பெரும் முயற்சி வாசகர்களுக்கு நல்ல விருந்தாக இருப்பதுடன் யாவரும் புரிந்துகொள்ளக்கூடிய எளிய ஆங்கில உரை நடையிலும் அமைந்திருப்பது வரவேற்கத்தக்கது. பிறநாட்டிலிருந்து வருபவர்களுக்கும் நண்பர்களுக்கும் அன்பளிப்பாக வழங்குவதற்கு ஏற்ற நூல் எனலாம்.

பா. அனந்தகிருஷ்ணன்

## பிரிட்டிஷ் தூதுவர் வெளியேற்ற உத்தரவு

மாஸ்கோ, ஆக. 20

மாஸ்கோவிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர், உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு சோவியத் யூனியன் அரசினால் உத்தரவிடப்பட்டுள்ளார்.

இம்மாத ஆரம்பத்தில் பிரிட்டனில் உளவுபார்த்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் பிரிட்டனிலிருந்த சோவியத் அதிகாரி ஒருவர் வெளியேற்றப்பட்டதற்குப் பழிவாங்கும் நோக்குடனேயே பிரிட்டிஷ் தூதுவர் இப்போது வெளியேற்றப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த அதிகாரி வெளியேற்றப்பட்டதற்கான காரணம் என்ன என்பது பற்றித் தெரிவிக்கப்படவில்லை. (இ)

# மக்கள் கருத்து

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணம் தருக

தமிழ், முஸ்லீம் பாடசாலைகளில் நாலாம், ஐந்தாம் தர அதிபர் வெற்றிடங்கள் நிரம்பப்படுவதற்கான போட்டிப் பரீட்சை ஒன்று நடைபெற இருப்பதாக வர்த்தமானி அறிவித்தலொன்று கூறுகின்றது.

1978 மாசி மாதம் இதே பரீட்சை எடுத்துச் சித்தியடைந்த 500க்கு மேற்பட்ட தமிழ் முஸ்லீம் ஆசிரியர்கள் கல்வி அமைச்சுக்கு நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்பட்டனர். அதன்பின்னர் இன்றுவரை அவர்களில் எவருக்கும் நியமனம் வழங்கப்படவில்லை. நேர்முகப்பரீட்சைக்குச் சென்ற பலர் இன்று இளைப்பாறியும் விட்டனர்.


நாட்டில் அப்போது ஏற்பட்ட பெருவெள்ளத்தையும் பொருட்படுத்தாது, பட்டுநகரில் குழப்பம் ஏற்பட்டிருந்தும் குறித்த நேர்முகப்பரீட்சைக்குப் பெரும்பணச் செலவும், பலவித போக்குவரத்துக் கஷ்டத்துக்கு மத்தியிலும், கொழும்புக்குச் சென்று நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றி நியமனத்தை எதிர்பார்த்திருக்கும் ஆசிரியர்கள் இன்னொரு நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றவேண்டுமென்று கேட்கப்படுகிறார்கள்.

1977ம் ஆண்டு பதவிக்கு வந்த இன்றைய அரசு 1978ல் நடாத்தி முடித்த நேர்முகப் பரீட்சைக்கு மீண்டும் அழைப்பது நீதியுள்ளதாக நியாயமுள்ளதாகத் தெரியவில்லை. வெண்ணெய்க்கட்டிக்குக் கட்டணம் அறவிட்டு, பரீட்சை எழுதிய பின்னர், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு வீண்டனச் செலவை ஏற்படுத்திவிட்டு, அவர்கள் நான்கு ஆண்டுகள் நியமனத்துக்காகக் காத்திருக்கும் வேளை மீண்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதை தமிழ், முஸ்லீம் எம். பிக்கள், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எதிர்ப்பதுடன் பாதிக்கப்பட்டவருக்கும் ஆசிரியர்களுக்கு முன்பெற்ற புள்ளி அடிப்படையில் நியமனம் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும்.

ந. சிவபாதம்

(1978ல் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட ஆசிரியர்)

அ. மி. த. க. பாடசாலை,
ஆனைக்கோட்டை.



## இன்று நல்லூர்க் கந்தன் கார்த்திகைத் திருவிழா

தொய்தாரணிமுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதாரையுமங்கு வாழவைப்
போன் வெய்ய வாரணம்
போற்
கைதானிருபது டையான்றலை
பத்துங்கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்தவிலஞ்சியமே

— கந்தர் அலங்காரம்.

## முழங்காவில் படித்த வாலிபர் திட்டத்தில்

# குறைகளை நிவர்த்திக்க அரசாங்க அதிபர் உறுதி

(யாழ்ப்பாணம்)

முழங்காவில் படித்த வாலிபர் விவசாயத்திட்டப் பகுதிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அங்குள்ள இளைஞர்களின் குறைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

இவர்கள் தெரிவித்த குறைகளை நேரடியாகப் பார்த்து கேட்டறிந்த அரசாங்க அதிபர் தம்மால் முடிந்தவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

அவருடன் மேலதிக அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம், மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு பத்மநாதன், விவசாய உத்தியோகத்தர் திரு சோமசேகரன், காணி அமைச்சின் வெளிநாட்டு ஆலோசகர் கலாநிதி தொம் குசாக், வட பிராந்திய நீர்வளச்சபைபொறியியலாளர் திரு ரி குணசேகரம், மாவட்ட அமைச்சின் இணைப்புச் செயலாளர் திரு பி பாலசிங்கம் ஆகியோரும் சமுகம் கொடுத்திருந்தனர்.

அரசாங்க அதிபரும் அவரது குழுவினரும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள வாலிபர்களின் காணிகளை நேரடியாகச் சென்று பார்த்ததுமல்லாமல் ஏற்கனவே குடியேற்றத் திட்டத்தின்கீழ் காணி வழங்கப்பட்டு அபிவிருத்தி அடைந்துள்ள குடியேற்றவாசிகள் காடுகளை அழனியாக்கி வைத்துள்ளமையைப் பார்த்து அவர்களுடைய முன்னேற்றத்தைப் பாராட்டினார். இதைத்தொடர்ந்து முழங்காவில் மகாவித்தியாலயத்தில் வாலிபர்கள் மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அரசாங்க அதிபர் "முழங்காவிலுக்கு விஜயம் செய்தது உங்களுக்கு உரையாற்றவல்ல, ஆனால் உங்கள் குறைகளைக் கேட்டறியவதற்கே" என்று ஆரம்பித்த அவர், வாலிபர்கள் குறிப்பிட்ட தொடர்ச்சியாக நீர்வழங்கல், திருத்திய காணிகளை திருத்திய வாலிபர்களுக்கே அளித்தல், நீர்ப்பாசன வாய்க்கால்களை அமைத்தல், புதுக்குதல், நீர்வளம் குறைந்த கிணறுகளை ஆழமாக்குதல், விவசாயத்திற்கு உகந்தது அல்லாததெனக் காணப்பட்ட சில காணிகளை மாற்றிக் கொடுத்தல் ஆகிய பலதரக் குறைகளை நிறைவு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்வாலிபர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் நீரிறைக்கும் இயந்திரங்கள் விரைவில் இயந்திரங்களாக இருப்பின் நீண்டநேர பாவிப்பிற்கும், பழுதடையாதிருப்பதற்கும் உகந்தது என விடுத்த வேண்டுகோளை அவர் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து முழங்காவில் உபதபால் நிலையத்திற்கு தொலைபேசி வசதி பெற்றுத் தருமாறும் அவர்கள் விடுத்த விண்ணப்பத்தை அரசாங்க அதிபர் கவனத்திற்கெடுப்பதாக கூறினார்.

இவ் விஜயத்தின் போது பிராந்திய அமைச்சின் செயலாளர் திரு. எஸ். பி. ஜெகநாதனும் இவ் அபிவிருத்தித் திட்டத்தைநேரடியாகப்பார்வையிடுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் எதிர்பாராத சில தடைகளினால் சமுகம் கொடுக்க முடியாமல் போய்விட்டது. இருப்பினும், முழங்காவில் படித்த வாலிபர் குழாய்க்கிணறுத் திட்டம் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் 80, 81ம் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டினால் மேற்கொள்ளப்பட்டு, செயற்பட்டு வருகின்றதென்பதையும் முழங்காவிலில் மேற்கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் 2வது திட்டத்திற்கும் வேண்டிய நிதியை பிராந்திய அபிவிருத்தி அமைச்சரிடமிருந்து கோர வேண்டுமெனவும் வாலிபர்கள் விடுத்த வேண்டுகோளை அரசாங்க அதிபர் தாம் கவனத்திற்கு எடுப்பதாக வாக்குறுதி அளித்தார்.

உடனடி நடவடிக்கையாக முழங்காவில் குழாய்க் கிணற்றுத் தேவைக்கென வாங்கி இன்று பாவிப்பிற்கு உகந்தல்லாதது எனக் கருதப்பட்ட நீரிறைக்கும் இயந்திரங்களை கேள்விகள் மூலம் விற்பனை செய்வதெனவும். மேற்கொண்டு 10 நீரிறைக்கும் இயந்திரங்களை உடனடியாக கொள்வனவு செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அரசாங்க அதிபரும் அவரது குழுவினரும் கிளிநொச்சி காணி அலுவலகம், கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆகிய அலுவலகங்களுக்கும் விஜயம் செய்து அங்கு கடமையாற்றும் அலுவலர்களுடன் கலந்துரையாடினர். கிளிநொச்சியில் ஏற்கனவே அத்துமீறிப் பிரவேசித்து குடியாளும் ஆயிரக்கணக்கான மக்களின் காணிகளையும் இவர் பார்வையிட்டார். இதையிட்டு மேற்கொண்ட நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட காணி உத்தியோகத்தர், உதவி காணி ஆணையாளர் ஆகியோர் பணிக்கப்பட்டுள்ளனர். (மா)

6-வது வெற்றி வாரம்
ராஜா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 2-30, 6-30
திசைமாறிய
பறவைகள்

நாகம்ஸ் (கல்லுண்டாய்)
தினசரி 2-30, 6-30
எதிரிகள்
ஜாக்கிரதை

வெலிங்டன்
தினசரி 4 காட்சிகள்
TAXI DRIVER
From 29-th
FIRST OF FURY

யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.—லதா
நீதிக்கு
தலைவணங்கு

சாந்தி (யாழ்.நகர்) 10-30, 2-30, 6-30 & 9-45
சிவாஜி — சௌகார் — சுந்தராம்பாள்
மகாகவி காளிதாஸ்
—புதிய பிரதி—
Await! "THE BRAVE BUNCH"—Adults.

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, 6-30, 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-சிவச்சந்திரன் முருகன்
ஒரு கை ஓசை

வெற்றிகரமான 6-வது வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
★ எம். ஜி. ஆர், ★ லதா
பல்லாண்டு வாழ்க
(கலர்)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ ஸ்ரீபிரியா
★ ராதாசலூஜா ★ தேங்காய்
★ நம்பியார் நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
(யாழ் நகர்)
மஞ்சுபார்கவி — துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

# மண்டூர் முகாமில் திஸ்ஸ அகதிகள்

(மண்டூர்)

அம்பாந்தோட்ட அகதிகள் முகாமில் கடந்த பதினொரு தினங்களாக தஞ்சம் புகுந்திருந்த 175 அகதிகள் மண்டூர்க் கிராமத்திற்கு வந்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடுநிசியில் இங்கு சேர்க்கப்பட்ட இவர்கள், மொனராகலை - அம்பாறை மார்க்கமாக விமானப்படை வீரர்களின் பாதுகாப்புடன் நாலு பஸ் வண்டிகளில் கொண்டுவரப்பட்டனர்.

திஸ்ஸமாறுகம பிரதேசத்தைச் சேர்ந்த லுணுஹெம்பெஹர, யால, உடவளவை, சூரியவெவ பகுதிகளில் தமது பிறப்பு முதல் வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் இவர்கள். தவிர இப் பகுதியில் நில அளவை வேலைகளில் ஈடுபட்ட நில அளவை முகாம்களைச் சேர்ந்த வவனியா, பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த தமிழர்களும் இங்குவந்துள்ளனர்.

மண்டூர்க் கந்தசாமி கோயில் வீதியில் தங்கியிருக்கும் இவர்களில் ஒருபெண் நிறைமாதக் கர்ப்பிணி ஒரு தமிழரை தனது வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொண்ட சிங்கள மாது ஒருவரும் தன் கணவருடன் இம்முகாமுக்கு வந்துள்ளார்.

அகதிகளுக்கு உணவு, உறைவிட வசதிகளைக் கவனிப்பதில் மண்டூர் கிராமத்திலுள்ள பொதுநல அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ணமன்றம் அதன் அமைப்பாளர் திரு. செழியன் பேரின்பநாயகம் தலைமையில் மன்றப்பணிமனையில் கூடி அகதிகளுக்கு உதவுவது பற்றி நீண்ட நேரம் ஆலோசனை நடைபெற்றது.

மன நிம்மதி குன்றி, நிர்க்கதியாயிருக்கும் இந்த அகதிகள் மன அமைதியாகக் கிராமத்தில் தங்கி இருக்கக்கூடிய சகல வழிகளும் செய்துகொடுப்பதிலும் உணவுத்தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக வீடுவீடாகச் சென்று போதியளவு அரிசி, காய்கறி வகைகளை சேகரிப்பதிலும் மன்ற அங்கத்தவர்கள் ஈடுபடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மன்றத்தின் சார்பில் கடந்த புதன்கிழமை முதல் மதியபோசனம் அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## வரவேற்பு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்களுக்கும், எம். பி.க்களுக்கும், வல்வெட்டியில் இன்று அளிக்கப்படவிருந்த வரவேற்புக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாகவே இக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக கூட்ட அமைப்பாளர் திரு. வே. சிவகுருநாத தெரிவித்துள்ளார். (மா)

## மன்னார் ஆயருக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பு

(மன்னார்)

புதிய மன்னார் மறை மாவட்ட ஆயராகப் பட்டாபிஷேகம் செய்யப்பட்ட பேரருட் திரு தோமஸ் சௌந்தரநாயகத்திற்கு அடுத்த மாதம் 6-ந் திகதி யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தினால் வரவேற்பளிக்கப்படும்

கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் தலைமைச்செயலகத்தில் நடைபெறும் இவ்வரவேற்பு விழா தொடர்பாக சகல கிளைச் செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது

மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு தோமஸ் சௌந்தரநாயகம் யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் இயக்குநராக சேவையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

## நூல்கள் அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

தவசி மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நூல் நிலையத்தை மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராஜா திறந்து வைத்தார். இந்த நூல் நிலையத்திற்கு பெறுமதி மிக்க நூல்களையும், சஞ்சிகைகள், படங்கள் ஆகியவற்றையும் இவர் அன்பளிப்புச் செய்தார்.

## வாகனங்கள்...

(4-ம் பக்க தொடர்ச்சி)

றும் எச்சரிக்கப்படுகின்றனர் தனியார்வாகனங்களில்மிதிபலகையிலும், பின்பக்கத்திலும் நின்று பிரயாணம் செய்பவர்களும்தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள் என்றும் இதுசம்பந்தமாக சுமார் 150 குற்றச் செயல்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் போக்குவரத்துப் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. பேர்குமார் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (மா-அ)

## பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட இளம் விவசாயக் கழகங்களின் பொருட்காட்சியும், கலைவிழாவும் இன்று கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. க. நடராசா, யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோர் உரையாற்றுவர். (மா)

# 5மீனவரும் கடலுக்குப்பலி!

## ஒருசடலம் கோடிக் கரையில் அடக்கம்

### நான்கு சடலங்கள் கரை ஒதுங்குகின்றன

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறையிலிருந்து கடந்த 8-ம் திகதி ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற ஐந்து மீனவர்களின் சடலங்கள் தமிழ்நாடு கடலில் மிதந்ததாகவும் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியதை அடுத்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்படுள்ளதாவது.-

''மேரிலூ'' என்ற யந்திரவள்ளத்தில் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று காணாமற்போன ஊர்காவற்றுறையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பாலசிங்கம், இம்மனுவேல் லாசரஸ், மரியின் செல்லப்பர்ணுந்து, காரைநகரைச் சேர்ந்த நாகன் கணபதி, கண்டியைச் சேர்ந்த மில்ரன் யோசெப்பீற்றர் ஆகிய ஐவரையும்தேடி ஊர்காவற்றுறையில் இருந்து இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடன் ''பபிதா'' என்ற இயந்திர வள்ளத்தில் இவர்களின் உறவினர்கள் இந்தியா கரையை நோக்கிச் சென்றனர். தஞ்சாவூரைச் சேர்ந்த தோப்புத்துறைக் கரையை சென்றடைந்த இவர்களுக்கு ஓர் அவலச் செய்தி காத்திருந்தது. அங்கிருந்த மீனவர்கள் 5சடலங்களையும் கடலில்கண்டதாகவும் ஒரு சடலம் மாத்திரம் கோடிக்கரையில் கரையை அடைந்ததாகவும் கூறினர். கரையை வந்தடைந்த சடலம் அவர் சென்ற வள்ளத்தின் நிழல் கூட்டுப்பலகை ஒன்றை பிடித்திருந்தபடி கரையை அடைந்ததென்றும் இச்சடலத்தை தாம் கோடிக்கரை கடற்கரையில் அடக்கம் செய்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவர்களைத்தேடி இங்கிருந்து சென்றவர்கள் இறந்தவர்களின் அடையாள அட்டையை இங்கிருந்து கொண்டு சென்றிருந்தமையால் கரையை அடைந்த பிரேதம் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மரிசிலின் செல்பர்ணுந்துவினது என அடையாளம் காட்டினர். மிகுதி நான்கு பிரேதங்களும் காற்றினாலும் அலைகளினாலும் அடிபட்டு கரைசேராமல் சென்று விட்டதெனவும் கூறினர்.

மீனவர்கள் ஐவரும் காணாமல் போனது சம்பந்தமாக ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கடற்றொழில் அமைச்சர், வெளிநாட்டு அமைச்சின் செயலாளர், யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளர். திரு தேவநேசன் நேசையா ஆகியோருக்கு தந்தி அடித்திருந்தார்.

இந்தியக்கரை ஒதுங்கிய சடலம் சம்பந்தமாக வெளிநாட்டு அமைச்சின் செயலாளருடன், யாழ். அரசாங்க அதிபர் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். [மா. இ]

## பதட்டமான சூழ்நிலையில் 'அந்த'ப் பிரதிகள் வெளியாயின

### பாராளுமன்றத்தில் சரத்

[கொழும்பு]

'ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு அச்சம்பவத்தின்போது உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் சடலம் அவரது சொந்த ஊருக்கு அனுப்பப்பட்டிருந்த வேளையில் நாட்டில் பதட்ட நிலை நிலவிய சமயத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் உரைகளின் பிரதிகள் ஏராளமாக அச்சிட்டு ஈழம் படத்துடன் பலருக்கு அனுப்பப்பட்டுள்ளது'

நாட்டில் பதட்ட நிலை இருந்த சமயம் குழப்பத்தை உருவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட பொறுப்பற்ற செயல் இது. அவ்வாறு அனுப்பப்பட்ட கடிதங்களில் யாருடைய உத்தியோக பூர்வ முத்திரையிடப் பட்டிருந்தது என்பதை நான் இங்கு கூற விரும்பவில்லை.

இவ்வாறு கலவான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'அவசர காலச்சட்டத்தை நாம் வரவேற்கிறோம். ஆனால் காலம் தாழ்த்தி இதனை அமுலுக்கு கொண்டுவந்ததற்கு அரசு மக்களுக்கு விளக்கம் கூறவேண்டும்.

#### தமிழருக்கும் பிரச்னை உண்டு

''பிரிவினையை நாம் எதிர்க்கிறோம்; அதே வேளை தமிழ் மக்களுக்கும் பிரச்னை உண்டு என்பதை ஏற்றுக்கொள்கிறோம். சிறுபான்மை மக்களை பாதுகாப்பது பெரும்பான்மை மக்களினதும் அரசினதும் பொறுப்பு வாய்ந்த பணி.

#### 4 ஆண்டுகளில் 2 வது கலவரம்

நான்கு ஆண்டுகளில் இம்முறை நடந்தது 2வது கலவரம் ஆகும். இக்கலவரத்திற்கு தமிழர் கூட்டணியினரின் 'தனிநாடு' கோரிக்கையும், வடபகுதியில் இடம்பெற்ற வன்செயல்களுமே காரணமாக இருக்கலாம். ஆனால் சிறுபான்மையினரை பாதுகாப்பது பெரும்பான்மையினரதும் அரசினதும் கடமை என்பதை மறுக்கக்கூடாது,

எதிர்க்கட்சித்தலைவர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டது;

நெவில் பெர்ணாண்டோ: ஏன் அந்த விவாதத்தில் நீங்கள் கலந்து கொள்ளவில்லை?

சரத்: ஓ இவர்தான் அப்பிரேரணையைப் பிரேரித்தார். அக்குழுவின் தலைவரும் இவர்தான். அந்தப் பிரேரணை மீதான விவாதத்தின் உரைகளின் ஏராளமான பிரதிகள் அச்சிடப்பட்டு ஈழம் படத்துடன் பலருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நெவில்: அது தொல்பொருள் ஆய்வு வரைபடம்.

சரத்: அந்தப்பிரதிகள் அனுப்பப்பட்டது என்பதை நீங்கள் மறுக்கிறீர்களா?

நெவில்: ஆம் அனுப்பப்பட்டது.

சரத்: நாட்டில் பதட்ட நிலை இருந்தபோது அனுப்பியுள்ளீர்கள். [ம]

## 2 பொலிசார்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்யப்பட்டனர்.

கொழும்பு குற்றப்புலனாய்வு துறை உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எம். பி. ஆலிஸ், இவர்களை யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார். [மா]

## கமராவைப் பொலிசார் கைப்பற்றினர்

[கொழும்பு]

வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவரின் காமராவும், ஒலிப்பதிவுக் கருவியும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## சொற்போர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எஸ் டி: விசாரணைக் கமிஷன் அமைத்து விசாரியுங்கள்.

பிரதமர்: விசாரணைக் கமிஷன் நியமிக்குமாறு நீங்கள் ஏன் பிரேரிக்கக் கூடாது?

### 77-ம் ஆண்டு கலவரம்

எஸ். டி. 2977-ம் ஆண்டு இனக்கலவரம் பற்றிய விசாரணைக்குப்பின் இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

பிரதமர்; நீங்கள் 1971-ம் ஆண்டு ஏன் கைதுசெய்யப்பட்டீர்?

ஃ ஃ ஃ

பிரதமர்: சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமை அலுவலகத்தை யாரிடம் கையளிப்பது?

எஸ். டி. யாரிடம் அதனைக் கையளிப்பது என்பது உங்கள் விஷயம் அல்ல. எமக்கு 19 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் அதனைத் தீர்மானிப்பார்கள்.

### சுதந்திரக் கட்சி பற்றிப் பேச...

மைத்திரி: சுதந்திரக் கட்சி பற்றிப் பேச இக்கனவானுக்கு உரிமை இல்லை. [திரு. அனுராவை சுட்டிக்காட்டி] அதோ இருக்கிறார் எமது செயலாளர். அவருக்கே அதுபற்றிப் பேச உரிமை உண்டு.

அத்துலத்: எந்த உரிமையின் கீழ் கம்பஹா எம். பி சபையில் அமர்ந்திருக்கிறார்?

எஸ். டி: மக்கள் உரிமையுடன்.

அனுரா; நான் ஒருபோதும் அவரைக் கட்சியிலிருந்து நீக்கமாட்டேன். அவர் தொடர்ந்தும் எனது நண்பராகவே இருப்பார்.

நெவில்: கம்பஹா எம். பி.க்கு மனநோய் பிடித்துள்ளது. அவரை மனநோய் நிபுணரிடம் அனுப்பவேண்டும்.

### அங்கொடைக்கு அனுப்பவேண்டும்

எஸ். டி. உம்மை அங்கொடைக்கு அனுப்பவேண்டும், எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கும்; கொலை, கொள்ளை இடம் பெற்று அவர்கள் அகதிகளானதற்கும் இவரே காரணம். [ம-இ]


# மரண அறிவித்தல்

## செல்லத்துரை இராமச்சந்திரன் (மனோன்)



கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை இராமச்சந்திரன் [மனோன்] சுவிற்சர்லாந்தில் காலமானார். இவர் காலஞ்சென்ற குணிலாகன உரிமையாளர் செல்லத்துரையினதும், திருமதி செ.பவளரெத்தினத்தினதும் புதல்வராவர். ஈமைக்கிரியைகள் இன்று சனிக்கிழமை [22-8-81] மாலை 4 மணியளவில் நடைபெறும்.

தகவல்: திருமதி ப. செல்லத்துரை, ''ராணி வாகனம்'' கொக்குவில் மேற்கு, கொக்குவில். 0701



# மரண அறிவித்தல்

## கந்தையா இராசரத்தினம்

[நில அளவையாளர்]

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த கந்தையா இராசரத்தினம் [நில அளவையாளர்] சவூதி அரேபியாவில் காலமானார். இவர் ஜெயலட்சுமியின் [நேசம்] அன்புக் கணவரும், மீனு [யாழ்ப்பாணக் கல்லூரி], சேந்தன், தயாளன் [வட்டு. இந்துக் கல்லூரி] ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற N. V. கந்தையா [மலேயன் பென்சனர்], திருமதி இராசம்மா கந்தையா ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற K. சதாசிவம் [ஓவசியர்], திருமதி தனலட்சுமிஅம்மா சதாசிவம் ஆகியோரின் மருமகனும், Major K. இரத்தினம் [நிறைவேற்றுப்பொறியியலாளர், பெருந்தெருக்கள் அமைச்சு, கொழும்பு], சட்டத்தரணி க. குணரத்தினம் [J. P. U. M. பதில் நீதிபதி மல்லாகம்], K. நவரத்தினம் [யாழ். ரெக்ஸ் இன்டஸ்றீஸ் சித்தங்கேணி] ஆகியோரின் சகோதரரும், Dr. S. பசுபதிராஜா [U. K.], S. தர்மலிங்கம் [கணக்காளர். பெருந்தெருக்கள் அமைச்சு அனுராதபுரம்], S செல்வராஜா [Cement Corporation Nigeria], திருமதிகள் கமலாம்பிகை குணரத்தினம், கனகமணி கணேசானந்தன், வசந்தா தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது பூதவுடல் வட்டுக்கோட்டை கிழக்கில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து இன்று 22-8-81 பிற்பகல் 4-00 மணியளவில் தகனக்கிரிகைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

0693



# தொழிற் பயிற்சிகள்

பொறியியலாளர்களால் நவீன முறையில் வெல்டிங் (Electric & Gas), இலெக்றிக் வயறிங், [Radio Officers Certificate] பயிற்சிகள் நடாத்தப்படும். இலவச கையேட்டிற்கு விண்ணப்பிக்கவும்.

NATIONAL INSTITUTES

57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.



இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுஸ்தாபனத்தின் உற்பத்திப் பொருட்களை

# பெருமளவில் கையிருப்பில் வைத்திருக்கின்றோம்

★ சிப்போட் ★ பிளைவூட் ★ பலகைகள்

மரக்கதவுகள் — மேசைகள்

அனைத்தும் கூட்டுஸ்தாபன விலைகளுக்கு விற்பனை செய்துவருபவர்கள்

# நாபன்ஸ் ரேட்ஸ்

74, ஆஸ்பத்திரி வீதி (சேகரம் கட்டிடம்) யாழ்ப்பாணம்

போன்: 8162


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.